மாண்புமிகு பேரவைத்தலைவர் : நான் ஏற்கனவே சொன்னேன். தொழுதூரில் ஆரம்பிப்பதற்காவது நன்றி சொல்லுங்கள். இந்தக்கேள்வி அதைப்பற்றியது. அதற்காக நன்றி சொல்வதாக இருந்தால் சரியாக இருக்கும். உட்காருங்கள்.

அடுத்த வினா எண். 493 திரு.வெ. தமிழரசு மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர்.

493—

சேலம் மாவட்டத்தில் 'சேகோ" சர்வ் என்னும் கூட்டுறவு அமைப்பு நிறுவனத்தை செம்மைப்படுத்தல்

*4926— திரு.வெ. தமிழரசு,
மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சேலம் மவட்டத்தில் சேகோ சர்வ் என்னும் கூட்டுறவு அமைப்பு நிறுவனம் இயங்குவது நிதிநெருக்கடி காரணமாக ஸ்தம்பிக்கும் நிலை ஏற்ப்பட்டுள்தால் பல இலட்சக்கணக்கான-விவசாயிகளுக்கும் குச்சிக்கிழங்கிற்கும் போதிய விலை கிடைக்காத நிலையும் 900—க்கும் மேற்பட்ட ஜவ்வரிசி ஆலைத்தொழில்கள் நலிவடைந்துள்ள நிலை ஏற்பட்டுள்ளதையும் அரசு அறியுமா?

(ஆ) இதை நம்பியுள்ள பல இலட்சக்கணக்கான தொழிலாளர்களைக் காக்க சேகோ சர்வை நன்கு செயல்ப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே,

(அ) சேகோ சர்வ் நிறுவனத்தில் நிதி நெருக்கடி இல்லை என்பதால் சேகோ தொழிலகங்களை மூடவேண்டிய அவசியம் இல்லை. மேலும் குச்சிக் கிழங்கு உற்பத்தியாளர்களுக்கு குச்சிக் கிழங்கிற்கு தகுந்த விலை பெறுகிறார்கள்.

(ஆ) அரசு இதனை நம்பி வாழும் சேகோ தொழிலாளர்களின் நலனைக் காப்பாற்றி வருகிறது. ஏற்கனவே விற்பனைவரி மானியமும் அரசால் இச்சங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது விலை ஏற்றத்தாழ்வு மிக அதிகமாக இருப்பதால் சேகோ, கார்ப்பரேஷன்—ஆவது அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, தற்போதுள்ள நிலைமைக்கு ஏற்றம்படி அரசு 1991–92 ஆம் ஆண்டிற்கு ரூ,50 இலட்சம் மானியம் வழங்கியுள்ளது.

1992 ஏப்ரல் 7]

திரு.க.அர்ச்சுனன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இந்த கன்சைன்மெண்ட் சேல்ஸ் என்ற முறையில் வட்நாட்டைச்சேர்ந்த ஒரு 10 சேட்-கள் தனியாக வியாபாரம் செய்கின்ற காரணத்தால் தான் அரசுக்கு வரவேண்டிய விற்பனைவரி அரசுக்கு ஏய்க்கப்படுகிறது. எனவே சேகோ சர்வ் நிறுவனம் அந்த 10 நபர் களோடு போட்டிப்போட்டு வியாபாரம் செய்யமுடியாத காரணத் தினால் அது நசிந்துவருகின்ற அந்தச் சூழ்நிலையில், நேற்றையதினம்புரட்சி தலைவி அவர்கள் கருப்புக்கற்கள் வியாபார முறையை ஒழுங்கு படுத்தியது போன்று இதையும் ஒழுங்குபடுத்தி சேகோ சர்வ் மூலமாகவேதான் இதையும் கொள்முதல் செய்து வியாபாரம் செய்யவேண்டும் என்ற ஒரு நிலையை உறுதிப்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, தற்போது கேட்கப்பட்டிருக்கின்ற கேள்வி இதற்குச் சம்பந்தம் இல்லாது இருப்பதால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனி கேள்வியைப் போட்டால் தகுந்த பதில் தெரிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*)உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிப்பார்க்கப் பெற்றது என்பதைக்குறிக்கும்.

2, கவன ஈர்ப்பு

(அ) திருச்சி மாவட்டம் புத்தானம்ப்பட்டியிலுள்ள நேரு நினைவு கல்லூரி ஆசிரியர்கள் அலுவலர்களுக்கு சம்பளம் வழங்கப்பெறாதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு திருவாளர்கள் எஸ்.எம். கிருஷ்ணன் மற்றும் எம். தங்கவேல் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு.எஸ்.எம் கிருஷ்ணன்.

திரு. எஸ். எம், கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சிமாவட்டம் புத்தனாம் பட்டியில் உள்ள நேரு நினைவுக் கல்லூரியில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கும்